திரு கோ. செபமாலை : இன்றைய பொருளாதாரம் வளர்கின்ற சூழ்நிலையில் அரிசனங்களுக்குக் கொடுக்கப்படும். இந்த ரூ. 500 அடிப்படையில் கொடுக்கப்படுகின்ற மாடுகளுக்கு மேலும் அதிகப் பணம் ஒதுக்கப்பட வேண்டும். அப்படிச் செய்ய வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. அதற்கு ஆவன செய்யவேண்டும்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஆலோசிக்கப்படும்.

Rehabilitation of physically handicapped

* 684 *Q*.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether this Government has any programme for rehabilitating the physically handicapped persons; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு செ. மாதவன் :

(அ) ஆம்.

(இ) பேரவை முன் வைக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில்@ விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

டாக்டர் எச். வி. ஹாண்டே : பொதுவாக இப்பேர்ப்பட்ட பிஸிக்கலி 'ஹான்டிகாப்ட்'க்கு அரசாங்கம் உத்தரவு மாதிரி போட முடியாது என்றிருந்தாலும் முதலாளிகளுக்கு, கம்பனிகளுக்கு இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மாதிரி, ஜெனரல் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுத்துவிட்டால் பல 'பிஸிக்கலி ஹான்டிகாப்ட்'க்கு நல்ல வாய்ப்பாக இருக்கும். அப்படிக் கொடுப்பதால் மற்றவர்களைவிட அவர்கள் நன்கு வேலை செய்யக்கூடிய நிலை இருக்கும். They will concentrate on their work. ஆகவே, இது பற்றி அரசாங்கத் துறைகளிலும், தனியார் துறையிலும் ஏற்பாடு செய்வதற்குத் துரிதமான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள அரசாங்கம் தயாராயிருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதேஅப்படிப்பட்ட உத்தரவு இருக்கிறது. அரசாங்கத்திற்கும் இருக்கிறது. தனியார் துறையைப் பொறுத்த வரையில் இதற்கென்று ஒரு ஸ்பெஷல் எம்ப்ளாய்மெண்ட் ஸெல் மூலம் வற்புறுத்தி வருகிறோம். ஊக்கம் தரவேண்டுமென்ற முறையில் யார் யார் ஆண்டுதோறும் அதிகப்படியான உடல் ஊனமுற்றோர்களை வேலைக்கு எடுத்துக்கொள்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் சென்ற ஆண்டிலிருந்து நம் அரசாங்கமே சர்டிபிக்கட்ஸ் வழங்குவதோடு வேலை செய்பவர்களுக்குப் பரிசுகளும் வழங்கி வருகிறோம். எந்தெந்த வகையில் உற்சாகமூட்ட வேண்டுமென்று முயற்சி அரசின் கவனத்தில் இருக்கிறது. மத்திய அரசைப் பொறுத்தவரையில் இதற்காக ஒரு தனிச் சட்டம் இயற்றுவதற்கு, ஒருகுறிப்பிட்ட பர்சென்டேஜ் இப்படிப்பட்ட ஊனம் உற்றவர்களுக்கு வேலைவாய்ப்புத் தரவேண்டுமென்ற கருத்தை நாம் வலியுறுத்தி வருகிறோம்.

162—169ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1972 மார்ச் 24]

THIRUMATHI ALDA M. FOWLER : Will the Hon. Minister please tell us whether there is a special body which will deal particularly with requests coming from handicapped persons ? Are there employment opportunities for these persons ? Many handicapped teachers or typists write to us for employment. To which address can we send those requests so that special employment could be found for them please ?

THE HON. THIRU S. MADHAVAN : I have already stated that we have got special employment office for physically handicapped people. This Government has already stated the steps taken to look after the welfare of these handicapped people.

THIRUMATHI ALDA M. FOWLER : May we know just where this place is so that we could direct our letters ?

THE HON. THIRU S. MADHAVAN : The same office, the special employment office for physically handicapped. We have got it in the Directorate of Employment. The hon. Member was participating in the function for the 'World Day' for handicapped people. She must be aware of all facilities we provide through this Directorate.

THIRU K. M. SUBRAMANIAM : Have the Government received representation from Blindmen's Association that they have not been treated properly and whereever they go they do not get employment? Particularly one or two individuals have been knocking about many of the Government establishments and have been told 'no job', even though they can do many jobs and they are qualified to do many jobs. Are the Government aware of this ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஊனமுற்றவர்களை விட லட்சக்கணக்கான பேர் வேலையில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். என்றாலும், ஊனமுற்றவர்களுக்குத் தனிச் சலுகை தரவேண்டுமென்ற அடிப்படையில் இதைச் செய்து வருகிறோம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே இது வரையில் இந்த உடல் ஊனமுற்றவர்கள் எத்தனை பேருக்கு எம்பிளாயிமெண்ட் எக்ஸ்சேஞ்சு மூலம் உத்யோகம் கொடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய சர்க்காரைப் பொறுத்த வரையில் 102, மாநில சர்க்கார் 637 பேர், குவாசி கவர்ன்மெண்ட், லோகல் பாடீஸ் 50, பிரைவேட் செக்டார் 404, கண் தெரியாதவர்கள் 121, காது கேட்காதவர்கள் 245, **Handicapped (Orthopaedically handicapped) 227.**

DR. H. V. HANDE : Sir, is the Government aware of the fact that just because they are handicapped, instead of giving them preferential treatment, they are chucked out. Is it possible for the Government to bring in State Enactment and give instructions to the Public Service Commission to give these handicapped persons preferential treatment and include it in their Code?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சட்டத்தைப் பொறுத்தவரையில் மத்திய அரசாங்கம் கொண்டு வந்தால் தான் நல்லது என்று கருதுகிறேன். நம்முடைய மாநில அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய எல்லாத் துறைகளுக்கும் குறிப்பாக இப்படிப்பட்ட உடல் ஊனமுற்றவர்களுக்கு டைபிஸ்ட், டெலிபோன் ஆபரேடர், டெஸ்பாட்ச் கிளார்க், லிப்ட் ஆபரேடர், இதுபோன்ற வேலைகளுக்கு பிரஃபரன்ஸ், முதலிடம் கொடுக்க வேண்டுமென்று நாம் வலியுறுத்தி வருகிறோம். ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் என்று ஒதுக்கினால் அதை நடத்துவதில் பல சங்கடங்கள் இருப்பதால், நாம் ஊக்கம் அளிக்கும் முறையில் மட்டும் ஆர்வம் காட்டி வருகிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இம்மாதிரியாக ஊனமுற்றவர்களுக்கு உதவி செய்வதற்கு, அதை ஞாபகப்படுத்துவதற்கு ஒவ்வொரு மாதமும் 3-வது ஞாயிற்றுக்கிழமையும் விழாக் கொண்டாடுகிறார்களே, இந்த மாதம் 19-ம் தேதி எந்தெந்த இடத்தில் கொண்டாடப்பட்டது? அதன் விவரம் என்ன? அதனால் ஏற்பட்ட பலன் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாநில அளவிலே, சென்னையிலே கொண்டாடப்பட்டது. வேறு இடத்தைப் பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

மேம்பாலங்கள்

*685 வினு.—**திரு. என். இட்டப்பா :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :—

மாயூரத்தில் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாயூரத்தில் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி 1973-ம் ஆண்டு இறுதிக்குள் முடிவடையும்.

திரு. என். இட்டப்பா : தலைவரவர்களே சென்ற ஆண்டு நமது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு ஏறக்குறைய ரூ. 45 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிற—மிக விரைவாகக் கட்டப்பட்டு வருகிற—அந்த மேம்பாலத்திற்கு மாயூரத்தைச் சேர்ந்த மொழிப்போர் வீரர் மாணவர் சாரங்கபாணி—மொழிக்காக உயிர் நீத்த சாரங்கபாணியின் பெயரைச் சூட்டுவதற்கு அரசு அலோசிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அப்படி ஒரு கோரிக்கை எழுத்து மூலம் வருமானால், அது பற்றி பரிசீலிக்கலாம்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS